# Perunchithiranarin Tamil Panikal

**K. Kartheeban**
*Part-Time Research Scholar, Department of Tamil*
*Government Arts College (Autonomous), Kumbakonam*
*Affiliated with Bharathidhasan University*

**Dr. T. Swaminathan**
*Associate Professor*
*Government Arts College (Autonomous), Kumbakonam*
*Affiliated with Bharathidhasan University*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346712

**Abstract**

*Perunchiththinar's songs exemplify pure Tamil style, simple diction, and meaningful expressions while adhering to the unchanging grammatical rules of the Tamil language. Through journals like Thenmozhi Tamilchittu, he actively contributed to social service and was a staunch proponent of the policy of a distinct Tamil Nadu. This study examines Perunchiththinar's Tamil contributions, including the achievements he realized through his activities in the freedom movement.*

***Keywords:*** *Pure Tamil Songs, Journals, Tamil Identity, Language Awareness, Rights, Freedom Movement*

**References**

1. Perunchiththinar & Kanichcharu, Volume I, Song 90, p.149
2. M. Vathmasan, Mozhi Valar, p.28
3. Perunchiththinar & Kanichcharu, First Volume, Song 31, p.53
4. Perunchiththinar & Kanichcharu, First Volume, Song 13, p.30
5. Perunchiththinar & Kanichcharu, First Volume, Song 27, p.50
6. Perunchiththinar & Kanichcharu, Second Volume, Song 58, p.99
7. Perunchiththinar & Kanichcharu, Fifth Volume, Song 16, p.17
8. Perunchiththinar, Kazuthai Azhutha Kadhai, p.68
9. Perunchiththinar & Kanichcharu, First Volume, Song 41, p.65

**Supplementary References**

1. Kanichcharu (Eight Volumes), Thenmozhi Publications, Chennai, Complete First Edition, 2012
2. Palli Paravaigal, Thenmozhi Publications, Chennai, Second Edition, 1995
3. Mahapuguvanchiru, Thenmozhi Publications, Chennai, Second Edition, 2018
4. Vazhviyal Muppadhu, Thenmozhi Publications, Chennai, Third Edition, 2015
5. Kazuthai Azhudha Kadhai, Thenmozhi Publications, Madavakkam, Chennai, Second Edition, 2017
6. Ulagiyal Nuru, Thenmozhi Publications, Chennai, First Edition, 1982
7. Paavaleeru Perunchiththinar: Vaazhkai Suvadugal, Pozhilan Manbatai Publications, Chennai, First Edition, 2016
8. Paavaleeru Perunchiththinar, & @. Kethmatchan, Literary Academy, Anna Salai, Chennai

# பெருஞ்சித்திரனாரின் தமிழ்ப் பணிகள்

***க. கார்த்தீபன்***
முனைவர பட்ட பகுதி நேர ஆய்வாளர் தமிழ்த்துறை
அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம்
பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவுபெற்றது

***முனைவர் த. சுவாமிநாதன்***
இணைப் பேராசிரியர்
அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம்
பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவுபெற்றது

***ஆய்வுச் சுருக்கம்***
*பெருஞ்சித்திரனார் அவர்களின் பாடல்கள் தனித் தமிழ் எளிய நடையையும் கருத்தாழமிக்க சொற்களையும் தமிழின் மாறாத இலக்கண நெறியை கொண்டு தென்மொழி தமிழ்சிட்டு போன்ற இதழ்களின் மூலமாக சமூக பணியாற்றினார் தனித் தமிழ்நாடு கொள்கையில் உறுதியுடன் இருந்தார். விடுதலைப் போராட்டங்கள் செயல்பாடுகள் வழியாக அடைந்த இன்னல்களையும் பெருஞ்சித்திரனார் ஆற்றியதமிழ் பணிகளை ஆய்ந்து விளக்குவதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாகும்.*
***முக்கியச் சொற்கள்:*** *தனித் தமிழ்பாடல்கள் இதழ்கள் தமிழினம் மொழி உணர்வு உரிமைகள் போராட்டம் அரசியல்*

## முன்னுரை

மனிதனால் உருவாக்கப்பட்ட கண்டுபிடிப்புகளிலேயே மிக உயர்ந்ததும் சிறந்ததுமானது மொழியே. முனிதனை பிற உயிர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது மொழி. மொழி ஒரு சமூகத்தின் கலை பண்பாடு வரலாறு சமயம் என அனைத்தின் கருவுலமாக திகழ்வது மொழியாகும். மனிதனது மனத்தை விடுத்து ஆராய்ந்தால் மொழியைப் பற்றி அறியத்தக்கதாக ஒன்றும் இல்லை.[2] ஒரு சமூகத்தின் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் எப்படி இருந்தாலும் அவர்களை இணைக்கும் கருவி மொழியாகும். அந்த மொழியைஅறிவதற்குமிகவும்பயன்படுவது இலக்கியங்களாகும். பெருஞ்சித்திரனார் சிறிது நேரம் கிடைத்தாலும் தாய்மொழியாகிய தமிழ் மொழியின் மேம்பாடு பற்றியும் தமிழ்நாட்டின் நலம் பற்றியும் சிந்தித்து செயலாற்றினார். இதற்காக தனது கருத்துகளையும் அரசியல் கொள்கையையும் பாடல்கள் மற்றும் பாவியங்கள் வழியாகபரப்பினார்

## பெருஞ்சித்திரனாரின் தமிழ்ப் பணி

பாடல்கள் என்பது மொழியின் மலர்ச்சியே பாட்டு. பாட்டுணர்வால் தான் மாந்தன் மீமிசை உயிருணர்வை எட்டுகின்றான். மற்ற உணர்வுகள் மாந்த உணர்வுகளிலேயே அவனைத் தேக்கி வைத்திருக்கையில் பாடல் உணர்வே புறவுணர்வுத் தளைகளைக் கட்டறுத்து உலகியல் றுகளினின்றும் விடுவித்து அவனை மீமிசைமாந்த நிலைக்கு உயர்த்துகிறது என்று பெருஞ்சித்திரனார் கனிச்சாறு முன்னுரையில் விளக்குகிறார். இவருடைய பாக்களில்தனித் தமிழ் உணர்வையும் கருத்தாழமிக்க பாடல்கள் மூலம் தமிழ் சமூகத்தில் உள்ளசாதிய

இழிநிலையையும் சமூகசீர்கேடுகளையும் அகற்றி தமிழினம் ஒற்றுமையுடன் இயங்கிடுமாறு பாடல்கள் இயற்றியுள்ளார்

**அறம் பெருகும் தமிழ் படித்தால்**
**அகத்தில் ஒளிபெருகும்![3]**

என்று தமிழ் படிப்பதின் அவசியத்தை மிக எளிமையான வார்த்தைகளை கொண்டு மனதில் நிற்குமாறு றியுள்ளார். தமிழகக் கல்விநிலையங்களின் காணப்படும் பிறமொழி ஆதிக்கத்தை பின்வருமாறு கண்டிக்கின்றார்

**தமிழ்ப்பற்றை ஊட்டாத தமிழ்க்கல்வி**
**தமிழர்க்குத் தீங்கு செய்யும்!...**
**தமிழ்ப்பற்றை வளர்க்காத மாணவரால்**
**தமிழ்நாட்டைக் கேடு ழும்![4]**

தமிழ்மொழிக்கு ஒரு தீங்கு என்றால் அதற்கு காரணமானவர்கள் யாராக இருந்தாலும் எந்த பதவியில் இருந்தாலும் துணிந்துதன் பாடல்கள் வாயிலாக தட்டிக் கேட்டவர் பெருஞ்சித்திரனார்.

**தமிழகத்தின் முதலமைச்சே தமிழ்மொழியின்**
**முதற்பகையாய் இருக்கும் கீழ்மை**
**தமிழகத்துள் அல்லாமல் பிறநாட்டில்**
**ஏங்கேனும் நடப்பதுண்டோ?[5]**

மொழி இன உரிமைக்காக தனது வாழ்நாள் எல்லாம் சிந்தித்து செயலாற்றிய பெருஞ்சித்திரனார். ஆதனை பின்வரும் தன் பாடல் மூலம் உணர்த்தியுள்ளார்.

உரிமையெனும் மெய்க்கொள்கை
தமிழர்க்கென்றும்

**உயிர்க்கொள்கை: உயிரை விட**
**உயர்ந்த கொள்கை![6]**

தனித் தமிழ் பாவலராக திகழ்ந்த பெருஞ்சித்திரனார். வருங்காலதமிழகத்தின் எதிர்காலமான குழந்தைகளுக்கு பள்ளிப் பறவைகள் எனும் தலைப்பில் பாடல் இயற்றியுள்ளார்.

**சிட்டுக் குருவிபோல் சுறுசுறுப் பாயிரு!**
**பட்டாம்பூச்சி போல் அழகாய்ப் புனைந்துகொள்!**
**குரங்குக் குட்டிபோல் குறும்புசெய் யாதே!**
**வேங்கைக் குருளைபோல் வீறுகொள் வாழ்வில்![7]**

என்று குழந்தைகளுக்கு தெரிந்த எளிய வார்த்தைகளைக் கொண்டு இனிமையாக பாடியுள்ளார். இன்றைய நவீன வாழ்க்கை முறையில் இளைஞர்களை வழி தவறாமல் இருக்கவும் தெளிவுபெறவும் எட்டடிகளில் வாழ்வியல் முப்பது எனும் குறும்பா இயற்றிதாமே உரை எழுதியுள்ளார். இல்லறச் சிறப்பையும் திருமணமான பெண் தன் புகுந்த வீட்டில் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகளையும் பெண்ணுரிமை கல்வி தாய்மை என்பனவற்றை மகபுகு வஞ்சி என்னும் முப்பது பாடல்கள் இயற்றியுள்ளார்.

கழுதை அழுதகதை எனும் புதுவகைப் பாவியத்தில் கழுதையை தலைமையாக வைத்து சிறுவர்களுக்காக இயற்றப்பட்டது தான் இப்பாவியம். மாந்தரினத்திற்கு இருக்க வேண்டிய உயர்ந்த குணங்கள் இல்லாமல் இருப்பதை விலங்குகளை கொண்டே பேச வைத்துள்ளார் பெருஞ்சித்திரனார்.

**சாத்திரங்கள் பேசிடுவார்**
**சாதிகுலம் வகுத்தார்**
**நாத் திறத்தால் ஏய்ப்பார்**
**நடிப்பால் பிழைத்திடுவார்8**

மக்களின் சாதிமத அடிமைத் தனம் விலக சிறுவர்களுக்கு மிக எளிய தமிழில் பாடியுள்ளார்.

## இதழியல் பணி

பெருஞ்சித்திரனாரின் பணிகளில் இதழ் பணியே முதன்மையானதாகும். பள்ளிப் பருவத்திலேயே குழந்தை என்னும் கையெழுத்து இதழை நடத்தினார். எட்டாம் வகுப்பு படிக்கும் போது மலர்க்காடு என்னும் கையெழுத்து இதழில் அருணமணி என்ற புனைப்பெயரில் எழுதி நடத்தினார். 1959ரூஇல் தென்மொழி என்ற தனித்தமிழ் இதழைத் தொடங்கினார் அரசுப் பணியில் இருந்ததால் பெருஞ்சித்திரன் மெய்மைப் பித்தன் தாளாளன் ட்டி போன்ற புனைப்பெயர்களில் தன் படைப்புகளை

வெளியிட்டார். கனிச்சாறு எனும் தொகுப்பில் உள்ள பெரும்பான்மையான பாடல்களும் கற்பனை ஊற்று பாவியக் கொத்து எண் சுவை போன்றவை முதலில் தென்மொழியில் வெளியிட்டு பின்னாளில் தனி நுலாக்கினார். தென்மொழி இதழில் தமிழ்மொழியில் கலந்துள்ள வடமொழி மற்றும் பிறமொழி சொற்களை நீக்கி தனித்தமிழ் இதழாகவே நடத்தினார். தமிழில் இல்லாத சொற்களை உருவாக்கி பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார். தமிழ் ஆண்டு பெயர்கள் திங்கள் பெயர்கள் தமிழில் இல்லாத நாட்கள் பெயர்களை தமிழ்ப் படுத்தி தென்மொழியில் வெளியிட்டார்.

தமிழ்ச்சிட்டு என்னும் இதழை இளைஞர்களுக்கு தமிழ் உணர்வுட்ட தொடங்கினார். பள்ளிப்பறவைகள்கழுதை அழுதகதை இளமைவிடியல் போன்றவை தமிழ்ச்சிட்டு இதழில் தொடர்களாக வெளியிட்டார். பெருஞ்சித்திரனாரின் அரசியல் கொள்கையால் தென்மொழி தடைசெய்யப்பட்ட போது சில காலம் தமிழ்ச்சிட்டாக தென்மொழி வந்தது. மேலும் அரசியல் நிலைக்காகவே தமிழ் நிலம் என்றவார இதழை தொடங்கினார்.

## அரசியல் பணிகள்

பெருஞ்சித்திரனார் 1968 இல் தனது அரசியல் கொள்கைக்காக உலகத் தமிழ்க் கழகம் என்ற அமைப்பை தோற்றுவித்தார். அதன்மூலம் அரசியல் பணிகளை மேற்கொண்டார். தமிழர்களை திராவிடர் என்று றுவது தவறு என வலியுறுத்தினார். கடலூர் அஞ்சலகத்தில் பணியாற்றியபோது இந்திதிணிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டதால் சிறைத் தண்டனை பெற்றார். இதனால் அரசுப்பணியை இழந்தார். தமிழ் வழி கல்வி தமிழ் ஆட்சிமொழி தமிழில் வழிபாடு போன்ற பல கொள்கைக்காக போராட்டங்களை நடத்தினார். அப்போரட்டங்களில் குடுபத்துடன் கலந்து கொண்டு சிறைசென்றுள்ளார். தமிழீழ விடுதலை தனி தமிழ்நாடு என்ற கொள்கையில் உறுதியாக இருந்தார். தமிழகம் மட்டும் இல்லாமல் தமிழுக்கும் தமிழர்க்கும் உலகில் எங்கு இன்னல்கள் ஏற்பட்டாலும் ஆதரவுக் கரம் நீட்டுவார். இதனால் அரசின் எதிர்ப்புக்கும் சிறை செல்லவும்பல நேரங்களில் ஆளானார். எத்தகைய ழ்நிலையிலும் கொள்கை மாறா மறவராகத் திகழ்ந்தார்.

## பிற தமிழ்ப் பணிகள்

பாவாணர் செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகர முதலி உருவாக்க முனைந்த போது அரசின் போதிய ஆதரவு இல்லாததால் பெருஞ்சித்திரனார் தென்மொழி இதழ் மூலம் செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகர முதலி உருவாக்கும் திட்டத்தை முன்னெடுத்தார் திருக்குறளுக்கு பல உரைகள் இருந்தும் அவைகள் ஆரியச்சார்புடன் இருந்ததால் திருக்குறள் மெய்ப்பொருளுரை என்று புது உரையை இயற்றினார். தனது அரசியல் கொள்கையால் சிறை சென்றபோதெல்லாம் தண்டனையாக கருதாமல் தமிழத் தாய்க்குத் தொண்டாற்ற கிடைத்த வாய்ப்பாக எண்ணினார். சிறையில் இருந்த போது ஐயை என்னும் தனித்தமிழ் பாவியத்தையும் திருக்குறள் மெய்ப்பொருளுரையையும் கனிச்சாறில் பல பாடல்களையும் இயற்றினார். பாவாணருடன் இணைந்து அரசு கொண்டு வந்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை எதிர்த்துப் போராடினார்.

## முடிவுரை

பெருஞ்சித்திரனார் தமிழர்கள் தமிழின உணர்வு கொள்ளவும் சமூகப் பாகுபாடு கள் நீங்கவும் வாழ்ந்தார் தமிழ் மொழியில் பிறமொழி சொற்களை நீக்கி தனித் தமிழில் தன் படைப்புகளை படைத்தார். தனது அரசியல் கொள்கையால் பல நேரங்களில் சிறைப்படுத்தபட்டாலும் தன் குடும்பத்திற்க்கு பல இன்னல்கள் ஏற்பட்டாலும் தமிழக உரிமைக்காக உறுதியுடன் இருந்தார்.

**எப்படியேனும் இத்தமிழகத்தை**
**முப்படி உயர்த்திடல் வேண்டும்!ரூஎன்**
**மூச்சதற் குதவிடல் வேண்டும்!9**

என்று தனது படைப்புகள் மூலம் தமிழக மக்கள் விழிப்புற்று தமிழின உணர்வு கொண்டு உரிமைகளை பெற்று வாழ்ந்திட உழைத்தார்.

**சான்றெண் விளக்கம்:**

1. பெருஞ்சித்திரனார் - கனிச்சாறு இரண்டாம் தொகுதிபாடல் 90 பக்கம் 149.
2. மு.வரதராசனார் - மொழி வரலாறு பக்கம் 28
3. பெருஞ்சித்திரனார் ரூ கனிச்சாறு முதல் தொகுதி பாடல் 31பக்கம் 53.
4. பெருஞ்சித்திரனார் - கனிச்சாறு முதல் தொகுதி பாடல் 13 பக்கம் 30.
5. பெருஞ்சித்திரனார் - கனிச்சாறு முதல் தொகுதி பாடல் 27பக்கம் 50.
6. பெருஞ்சித்திரனார் - கனிச்சாறு இரண்டாம் தொகுதி பாடல் 58பக்கம் 99.
7. பெருஞ்சித்திரனார் - கனிச்சாறு ஐந்தாம் தொகுதி பாடல் 16பக்கம் 17.
8. பெருஞ்சித்திரனார் - கழுதை அழுதகதை பக்கம் 68.
9. பெருஞ்சித்திரனார் - கனிச்சாறு முதல் தொகுதி பாடல் 41 பக்கம் 65.

**துணைநூற்பட்டியல்**


1. கனிச்சாறு (எட்டுத்தொகுதி) - தென்மொழி பதிப்பகம் சென்னை முழுமையான முதற்பதிப்பு 2012.
2. பள்ளிப் பறவைகள் தென்மொழி பதிப்பகம் சென்னை இரண்டாம் பதிப்பு 1995.
3. மகபுகுவஞ்சிரூ தென்மொழி பதிப்பகம் சென்னை இரண்டாம்பதிப்பு 2018.
4. வாழ்வியல் முப்பது - தென்மொழி பதிப்பகம் சென்'னை மூன்றாம் பதிப்பு 2015.
5. கழுதை அழுத கதை - தென்மொழி பதிப்பகம் மேடவாக்கம் சென்னை இரண்டாம் பதிப்பு 2017.
6. உலகியல் நுறு ரூ தென்மொழி பதிப்பகம் சென்னை முதற்பதிப்பு 1982
7. பாவலரேறு பெருஞ்சித்திரனார் வாழ்க்கைச் சுவடுகள் - பொழிலன் மன்பதைப் பதிப்பகம் சென்னை. முதல் பதிப்பு 2016.
8. பாவலரேறு பெருஞ்சித்திரனார் - டூ.கெத்ரட்சகன் சாகித்திய அகாதெமி அண்ணாசாலை சென்னை.